| | |
|---|---|
| **வாக்குமூலம்** Date: 19.03.2024 | |
| நீதிமன்றம் : குற்றவியல் நடுவர் நீதிமன்றம், மணப்பாறை | |
| வழக்கு எண்: STC 892/2023 | |
| வழக்கு சாட்சி : PW 1 | |
| பெயர் : திரு. விஜயலெட்சுமி | ஜாதி : |
| த/பெ/க/பெ. : திரு. அழகர்சாமி | தொழில் : கூலிவேலை |
| கிராமம் : அழங்காம்பட்டி | சமயம் : |
| தாலுக்கா : மருங்காபுரி | வயது : 31 |
| ( எதிரி ஆஜர் வழக்கறிஞர் ஆஜர் ) | |

---

**அரசு தரப்பு முதல் விசாரணை தொடர்ச்சி**

**1.** ஆஜர் எதிரிதான் விபத்து ஏற்படுத்திய வாகனத்தின் ஓட்டுநர். இந்த வழக்கு சம்மந்மாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

**2.** எனது கணவர் தான் இருசக்கரவாகனத்தை ஓட்டினார் என்றால் ஆமாம். எனது இரண்டு குழந்தைகளும் வண்டியில் தான் இருந்தார்கள் என்றால் ஆமாம். நாங்கள் நான்கு பேர் இருசக்கரவாகனத்தில் சென்றோம் என்றால் சரிதான். எனது கணவர் வாகனத்தை ஓட்ட போது நான் பின்னால் அமர்ந்திருந்தேன் என்றும், அப்போது நேர் எதிராக வரும் வாகனத்தை பார்க்க முடியுமா என்றால் நேரடியாக பார்த்தேன். வாகனத்தில் நான் ஓரமாக உட்கார்ந்திருந்தேன் என்றால் ஆமாம்

3. நேர் ரோட்டில் தான் விபத்து நடந்தது என்றால் ஆமாம். சம்பவம் நடக்கும் போது 8.30 மணியிருக்குமா என்றால் 6.00 –6.30 மணியிருக்கும், இருட்டாக இருந்தது. எனது கணவர் எந்த திசையில் மோதினார் என்றால் வடக்கே இருந்து தெற்கே இடது ஓரமாக சென்று கொண்டிருந்த போது நேருக்கு நேராக எதிரியின் வாகனம் வந்து மோதிவிட்டது. எதிரியின் வாகனம் பின்புறத்திலோ, வலது, இடது புறத்திலோ மோதவில்லை என்றால் சரிதான். எதிரியின் வாகனம் எனது கணவர் வாகனத்தின் மோதிய பிறகு எனது கணவர் வாகனத்தின் வலது முன்புறத்தில் சேதாரம் ஏற்பட்டிருந்தது.

4. எதிரியின் வாகனத்தை பார்த்தோமா என்றால் பார்த்தோம். எதிரியின் வாகனத்திற்கு சேதாரம் இருந்ததா என்றால் சேதாரம் இருந்தது. எதிரியின் வாகனத்தின் பிரேக், சாண்டு, பெடல் ஆகிய இடங்களில் சேதாரம் ஏற்பட்டிருந்தது என்றால் எங்கள் வாகனத்திற்கு சேதாரம் ஏற்பட்டிருந்தது. எதிரியின் வாகனத்திற்கு சேதாரம் ஏற்படவில்லை.

5. விபத்து நடந்தவுடன் அங்குள்ளவர்கள் ஆம்புலன்சிற்கு போன் செய்தார்கள் என்றால் இரண்டு நபர்கள் பின்னால் வந்தார்கள். போலீசார் விசாரணையில் இரண்டு வண்டிற்கும் சேதாரம் ஏற்பட்ட விபரத்தை சொன்னேனா என்றால் சொன்னேன். எதிரியின் குழந்தைக்கு காயம் ஏற்பட்டதா என்றால் ஏற்பட்டது. எனது கணவர்தான் வீட்டிற்கு செல்லவேண்டும் என்ற அவசரத்தில் எதிரியின் வாகனத்தில், பிரேக், பெடல் அருகில் மோதியுள்ளார் என்றால் சரியல்ல. எனது கணவர் தான் அஜாக்கிரதை, அதிவேமாக வாகனத்தை ஓட்டி வந்தார் என்றால் சரியல்ல. இருட்டான நேரத்தில் 108 ஆம்புலன்ஸ் மூலம் சிகிச்சைக்கு சென்றோம் என்றால் ஆமாம்.

6. எதிரி அஜாக்கிரதையாகவும், கவனக்குறைவாகவும் வரவில்லை என்றும், எனது கணவர் தான் அஜாக்கிரதையாகவும், கவனக்குறைவாக வந்தார் என்றால் சரியல்ல. உண்மையிலியே எதிரி நேருக்கு நேராக மோதியிருந்தால் அதன் அடையாளத்தை போலிசார் விசாரணையில் சொல்லியிருப்பேன் என்றும், இருசக்கரவாகனத்தின் பின்னால் அமர்ந்திருந்ததால் சரியாக இந்த விபத்தை கவனிக்கவில்லை என்றும், எதிரிக்கு எதிராக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் விபத்தை கவனித்தேன். சம்பவ இடத்தில் யார் யார் இருந்தார்கள் என்பது பற்றி போலிசார் விசாரணையில் சொன்னேனா என்றால் போலிசார் என்னிடம் கேட்கவில்லை, நான் சொல்லவில்லை. இழப்பீடு வழக்கு தாக்கல் செய்துள்ளோமா என்றால் தாக்கல் செய்துள்ளோம். இழப்பீடு வாங்குவதற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

| | |
|---|---|
| **வாக்குமூலம்** Date: 19.03.2024 | |
| நீதிமன்றம் : குற்றவியல் நடுவர் நீதிமன்றம், மணப்பாறை | |
| வழக்கு எண்: STC 892/2023 | |
| வழக்கு சாட்சி : PW2 | |
| பெயர் : திருமதி. சத்யா | ஜாதி : |
| த/பெ/க/பெ. : திரு. கணேஷ் | தொழில் : மோட்டார் வாகன ஆய்வாளர் |
| கிராமம் : மணப்பாறை | சமயம் : |
| தாலுக்கா : மணப்பாறை | வயது : 36 |
| ( எதிரி ஆஜர், வழக்கறிஞர் ஆஜர் ) | |

---------------------------------------------------------------

**அரசு தரப்பு முதல் விசாரணை**

**1.** நான் தற்போது மணப்பாறையில் மோட்டார் வாகன ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 18.05.2023 அன்று காலை 8.15 மணியளவில் புத்தாநத்தம் காவல் ஆய்வாளர் அவர்களின் வேண்டுகோள் கடிதம் கிடைக்கபெற்று TN 55 AY 1663 என்ற இருசக்கரவாகனத்தை அலுவலக வளாகத்தில் வைத்து விபத்து ஆய்வு செய்தேன். வாகனத்தின் முன்புற, இடது பக்க இண்டிகெட்டர் உடைந்தநிலையிலிருந்தது. வாகனத்தன் வலது பக்க லெக்கார்ட் சேதமடைந்திருந்தது. வாகனத்தின் கால்தடை பெடல் வளைந்த நிலையிலிருந்தது. வாகனத்தின் முன்புற வலது பக்க ஆர்.வி மிரர் உடைந்தநிலையிலிருந்தது. இந்த விபத்தானது இயந்திர கோளறால் ஏற்படவில்லை என சான்று வழங்கினேன். **TN 55 AY 1663 என்ற வாகனத்திற்கான மோட்டார் வாகன ஆய்வு அறிக்கை அ.சா.ஆ. 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

2. 23.05.2023 அன்று காலை 9.00 மணியளவில் அலுவலக வளாகத்தில் TN 45 CX 1365 என்ற இருசக்கர வாகனம் விபத்து ஆய்வு செய்யப்பட்டது. வாகனத்தின் கால் தடை பெடல் சேதமடைந்திருந்தது. வாகனத்தன் சென்டர் ஸ்டாண்ட் சேதமடைந்திருந்தது. இந்த விபத்தானது இயந்திர கோளறால் ஏற்படவில்லை என சான்று வழங்கினேன். TN 45 CX 1365 **என்ற வாகனத்திற்கான மோட்டார் வாகன ஆய்வு அறிக்கை அ.சா.ஆ. 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

**3.** ஒரு இருசக்கரவாகனத்தில் நான்கு பேர் பயணம் செய்வதும், ஹெல்மேட் இல்லாமல் பயணிப்பதும் தண்டனைக்குரிய குற்றம் என்றால் சரிதான். விபத்தில் பாதிக்கப்பட்ட அழகர்சாமி ஓட்டிய வாகனத்திற்கு காப்பீடு இல்லை என்றால் சரிதான். காப்பீடு இல்லாமல் இருசக்கரவாகனத்தை ஓட்டுவது தண்டணைக்குரிய குற்றம் என்றால் சரிதான். அழகர்சாமி ஓட்டி வந்த TN 55 AY 1663 இருசக்கரவாகனத்தில் ஹெட்லைட், சைடு லைட் சரியாக உள்ளது என்று எனது அறிக்கையில் சொல்லவில்லை என்றால் சரிதான்.

4. TN 45 CX 1365 என்ற வாகனத்திற்கும் பிரேக்பெடல், சென்டர் ஸ்டாண்ட்டிலும் சேதாரம் ஏற்பட்டுள்ளது என்றால் சரிதான். அழகர்சாமி ஓட்டி வந்த TN 55 AY 1663 இருசக்கரவாகனத்தில் முன்புறத்தில் தான் சேதாரம் ஏற்பட்டிருந்தது என்றால் சரிதான். மேற்படி சேதாரம் TN 55 AY 1663 இருசக்கரவாகனம் எதிரி வாகனமான TN 45 CX 1365 என்ற வாகனத்தின் மீது மோதினால் முன்புறத்தில் சேதாரம் ஏற்பட வாய்ப்புள்ளது என்றால் சரிதான்.